1974 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி அளிக்கத் தேவையில்லை என்று கருது கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) திருத்தணி வட்டத்தில் பருவ மழை தவறியதும் நில வரி கடன் வசூலை ஒத்திவைப்பதன் அவசியமும் குறித்து

THIRU A. PARANDHAMAN : Sir, I call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the failure of monsoon in Tiruttani taluk and the need to postpone the collection of land revenue, loans, etc., from the ryots of that area.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 1383-ஆம் பசலி ஆண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் திருத்தணி வட்டம் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளதாக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 1383-ம் பசலி ஆண்டில் இந்த வட்டத்தில் கீழ்க்காணும் மூன்று ஏரிகளுக்கு மட்டுமே நீர் கிடைத்தது :—

1. ஹரிசந்திரபுரம்
2. வியாசபுரம்
3. பழையனூர்

ஏனைய ஏரிகள் அனைத்துக்கும் நீர் கிடைக்கவில்லை. திருத்தணி வட்டத்தில் 1969, 1970, 1971, 1972-ஆம் ஆண்டுகளில் முறையே 1,204.6 மி.மீ; 1,158.6 மி.மீ; 1,025 மி.மீ; 926 மி.மீ; மழை பெய்தது. 1973-ஆம் ஆண்டில் 745 மி.மீ. மழை பெய்தது.

திருத்தணி வட்டத்தில் உள்ள நிலங்கள் அனைத்தும் ஒருபோக நன்செய் நிலங்களாகும். இந்த வட்டத்தில் 1383-ஆம் பசலி ஆண்டில் பயிர் விளைச்சலின் கீழ் உள்ள 12,083 ஏக்கர் நன்செய் நிலங்களில், 9,322 ஏக்கர்களில் அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூபாய்க்கு 25 காசுக்கும் அதற்கு மேற்பட்டும் பலன் கிட்டியது. எஞ்சிய 2,761 ஏக்கர்களில் உள்ள பயிர்கள் சாவியாகி விட்டன. எனவே, தண்ணீர் பற்றுக்குறை காரணமாக முழு

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 8

தீர்வை விதிப்பதினின்றும் தள்ளுபடி வழங்குவதற்கு 13(2) ஆம் எண் வாரிய நிலை ஆணையின் கீழ் திருத்தணி வட்டம் தகுதியுடைய தாகும். அடிப்படை நிலவரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை ஆகியவற்றின் கீழ் தள்ளுபடி வழங்கப்படும் மொத்தத் தொகை தோராயமாக ரூ. 3,25,879 ஆகும்.

இந்த வட்டத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள வேர்க்கடலைப் பயிரின் இரண்டாம் போக பயிர் நிலைமையும் நன்றாக இல்லை. பாசன வசதியற்ற நிலையில் 1,210 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட வேர்க்கடலைப் பயிர்கள் மழையின்மையால் பாதிக்கப்படுகின்றன. 4,401 ஏக்கர் நிலத்தில் பாசன வசதியுடன் பயிரிடப்பட்ட வேர்க் கடலைப் பயிர்கள் பூச்சிகளாலும், நீர்ப்பற்றுக்குறையினாலும் பாதிக்கப்படுகின்றன. ஆனால், இந்த நிலங்கள் ஒரு போக நன்செய் நிலங்களாக இருப்பதால் இரண்டாவதாகப் பயிரிடப்பட்ட வேர்க்கடலைப் பயிருக்குத் தள்ளுபடி எதுவும் வழங்க மேற்படி பயிர் தகுதியுடையதாகாது.

இந்த வட்டத்தில் குடிநீர் கிடைப்பதைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட எல்லா கிராமங்களிலும் நீர்ப்பற்றுக்குறை இருப்ப தாகக் கூறலாம். வட்டத்தில் நிலவி வரும் குடிநீர்ப் பற்றுக் குறையை ஓரளவு நீக்க குடிநீர்க் கிணறுகள், குளங்கள், ஊரணிகள் முதலியவற்றை ஆழப்படுத்துவதற்குக் கடன் வழங்கு வதற்கான செயற்குறிப்புகளைத் தனியாக அனுப்புவதாக செங்கற் பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பேட்டை துணை வட்டம், பென்னலூர் துணை வட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், பொன்னேரி வட்டம், கும்மிடிப்பூண்டி துணை வட்டம், ஆகிய இடங்களில் நடப்பு பசலி ஆண்டில் மழையின்மையால் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். இப்பயிர்களுக்கும் தேவையான வரித் தள்ளுபடி வழங்கப்படலாம்.

வறட்சி, புயல் காரணமாக உழவர்கள் கடன் தவணைகளைத் திருப்பி செலுத்த முடியாத நிலையில் இருக்கும்போது மெதுவாக வசூல் செய்யும் கொள்கையை அல்லது அரசுக்குச் செலுத்த

வேண்டிய தொகைகளை வசூல் செய்வதை ஒத்திப் போடுதல் என்ற நடைமுறையைப் பின்பற்றுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிடப்படுவது அரசின் கொள்கையாக உள்ளது. பஞ்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நாட்டத்திற்கு வரும்போது, அப்பகுதிகளில் கடன் வசூலை தங்கள் விருப்பப்படி ஒத்திப் போடுவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் Sir, by way of elucidation. தலைவர் அவர்களே, பொதுவாகப் பார்க்கிற நேரத்தில் செங்கல்பட்டு, திருத்தணி வட்டங்களில் மழை பொய்த்துவிட்ட காரணமாகப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்களே சொன்னார்கள். நான் நடைமுறையில் உள்ள நிலைமையைக் கருதி மனவேதனையுடன் கூற விரும்புவது

‘ All the Tahsildars and Independent Tahsildars are requested to mobilise all the sources at their disposal and under the purview of the Revenue Recovery Act to achieve the target at any cost before 31st March 1974 ’.

என்று மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இந்த அறிக்கையின் அடிப்படையில் அங்கங்கே ஜப்திகள் நடைபெறுகின்றன. உண்மையை உணர்ந்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக ரெமிஷன் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானமே—மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கும் வந்திருக்கிற காரணத்தினால்—நிலைமைகளைப் பரிசிலித்து விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படாத அளவுக்கு அவர் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்பதை நான் உறுதியாகத் தெளிவுபடுத்துகிறேன்.